**தலைப்பு 294 - தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 294 - தேசிய மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 செப்தம்பர் 27 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 896.43 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 863.23 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 33.20 மில்லியன் அதாவது 3.7 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 299.78 | 299.08 | 0.70 | 0.23 |
| மூலதனம் | 596.65 | 564.15 | 32.50 | 5.45 |
| மொத்தம் | **896.43** | **863.23** | **33.20** | **3.70** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 29401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 16.00 | 12.43 | 10.60 | 13.61 | 65.00 | 45.99 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0146/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் மீதி ரூபா 72.03 மில்லியனாக காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 05 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,934.70 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
| --- | --- |
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0015/0149/000 | 0.07 |
| 6000/0000/00/0002/0125/000 | 5.79 |
| 6000/0000/00/0016/0074/000 | 86.04 |
| 6000/0000/00/0006/0026/000 | 1,842.49 |
| 6000/0000/00/0018/0081/000 | 0.31 |
| மொத்தம் | 1,934.70 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
| --- | --- | --- |
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை. |
| (ஆ) | கணனி, துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### பாதீட்டு முரண்

செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 500,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்திற்குரிய புத்தகங்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 72,302,697 ஆக இருந்த போதிலும், அத்திகதியில் வரவுக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டிருந்த திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்ட தொகை ரூபா 72,279,296.65 மாத்திரமாக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 23,400 தொகை திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

2 ஆண்டுகளை மிகைத்த ரூபா 29,394,997 கூட்டுத்தொகையான 107 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு

29401 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்று தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,586,703 ஆக காணப்பட்டதுடன், அந் நிலுவை மீதிகள் 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து இருந்த வந்தபோதிலும், அந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2015 ஆம் ஆண்டிற்காக 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2015 ஆம் ஆண்டிற்குரிய திணைக்களத்தின் கால்நடைகள், பறவைகள், மீன்கள் மற்றும் ஊர்வன தொடர்பான கணிப்பீட்டை மேற்கொண்டு அவ்வறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 இணக்கமின்மைகள்

#### சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | | | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| | (i) | XIX ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு | - | சகல அரசின் இல்லங்களும் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமையுள்ள உத்தியோகத்தர் வகுப்பின் பிரகாரம் தரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.4 ஆம் பிரிவு | - | அரச சேவையிலுள்ள கணவன் மனைவி அரச இல்லத்தில் குடியிருக்கும் சந்தர்ப்பத்தில் துணைவரின் சம்பளத்தில் 5 சதவீதம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| | (iii) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவு | - | அரச இல்லங்களில் குடியிருக்கும் அரச உத்தியோகத்தரால் நீர் மற்றும் மின்சாரத்திற்காக கட்டணங்களை நேரடியாகச் செலுத்தியிருக்கவில்லை. |
| | (iv) | XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | - | அரச இல்லங்களுக்கான குத்தகைக் காலம் 05 ஆண்டுகளாக இருந்த போதிலும், 13 உத்தியோகத்தர்கள் அக்கால எல்லையை விஞ்சி அரச இல்லங்களில் குடியிருந்தனர். |
| | (v) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.5.1 ஆம் பிரிவு | - | ஒவ்வொரு இணைந்த குடியிருப்பாளரிடமிருந்தும் சம்பளத்தில் 10% சதவீதப்படி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவை | | | |
| | (i) | 4.3.1 வழிகாட்டல் | 5,293,035 | பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்கப்படாமல் நீர் வடிகட்டி முறைமையொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. |
| | (ii) | 8.9.3 வழிகாட்டல் | - | ஒப்பந்த உடன்படிக்கையொன்று கைச்சாத்திடாமல் நீர் வடிகட்டி முறைமையொன்று நிர்மாணிப்ப தற்காக அரச நிறுவனமொன்றுக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. |

**3.9 செயலாற்றல்**

2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

திணைக்களம் பிரதான பணிகளை போதியளவில் நிறைவேற்றாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) தெஹிவள மிருகக்காட்சிசாலையின் பொங்கால புலி அரண் மற்றும் புலிக் குடும்பத்தின் அங்கத்தவர்களுக்காக அரண் நிர்மாணம் 2015 சனவரி 15 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2015 யூன் 31 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டுமென செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதற்கான மதிப்பீட்டு கிரயம் ரூபா 30 மில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் அதில் 80 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அத்திகதியில் உள்ளவாறு திரட்டிய செலவினம் ரூபா 42.5 மில்லியனாக இருந்தது. செயற்திட்டம் 2015 யூன் 30 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் அந்நிர்மாணம் 2016 யூன் 30 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ii) தெஹிவள மிருகக்காட்சிசாலையின் ஊர்வன பூங்கா நவீனமயப்படுத்தல் 2015 யூலை 15 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2015 திசெம்பர் 15 ஆந் ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 40 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(iii) தெஹிவள மிருகக்காட்சிசாலையின் வெளிநாட்டு பறவைகள் பூங்கா நவீனமயப்படுத்தல் 2015 மே 15 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2015 நவம்பர் 30 ஆந் ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியின் போதும் அதில் 50 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(iv) தெஹிவள மிருகக்காட்சிசாலையின் கழிவுப்பொருட் தாங்கி திருத்தம் 2014 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும், 2015 ஆம் ஆண்டின் இறுதி அளவிலும் அதில் 65 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அந்நிர்மாணம் 2016 யூலை 07 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(v) பொங்கால புலி அரண், சிறுத்தை மற்றும் கரடி அரண் என்பன 2015 திசெம்பர் மாதம் ஆரம்பத்தின் போது ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும் இரண்டு செயற்திட்டங்களும் 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத செயற்பாடுகள்**

2015 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத பின்வரும் செயற்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருந்ததாக செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

**(i) தெஹிவள மிருகக்காட்சிசாலை**

---

**பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.**

- 06 ஆம் இலக்க உள்ளக வீதியை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 26.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.
- தாராவிற்கான அரண்கள், சேவை வீதி, ஊழியர் வாகன தரிப்பிடம் மற்றும் மலசலகூட முறைமை ரூபா 5.7 மில்லியன் செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.
- குரங்கு கூடுகளை அமைப்பதற்காக ரூபா 2.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**(ii) பின்னவெல மிருகக்காட்சிசாலை**

---

**பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.**

- தெரிவுசெய்யப்பட்ட சில உள்ளக வீதிகளை நவீனமயப்படுத்தல்
- குளத்தை புனரமைத்தல்
- நலன்புரி சிற்றுண்டிச்சாலையைச் சுற்றிய பிரதேசத்தை நவீனமயப்படுத்தல்
- அலுவலகத்திற்கு அண்மையில் எல்லைச் சுவரை நிர்மாணித்தல்

**(iii) ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா**

---

பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

- வாகன தரிப்பிட நிர்மாணம்
- சிங்கம் கால்நடை பொறுப்பாளர்களுக்கான கூடாரங்களை நிர்மாணித்தல்

## 3.10 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

2014 ஆம் ஆண்டின் போது திணைக்கள தலைப்பின் கீழ் ரூபா 5 மில்லியன் செலுத்தி சபாரி பூங்காவிற்கு நான்கு தீக்கோழிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த பிராணிகளை விற்பனை செய்வதற்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2015 யூன் 24 ஆந் திகதிய LP/H/ZDWF/01/14/42 ஆம் இலக்க கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 4.4(iii) ஆம் பந்திக்குரிய பதிலுடன் சமர்ப்பித்த அனுமதிப்பத்திரத்தின் செல்லுடிக்காலம் 03 மாதங்களுடன் 2012 யூலை 12 ஆந் திகதியுடன் 3 வகையான இரண்டு வயதுடைய பிராணிகளை இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரமொன்றாகும். அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் பிராணிகள் 2 வயதினை உடைய தீக்கோழிகளுக்காக விலைகோரும் சந்தர்ப்பத்தில் அப்பிராணிகளின் வயது 03 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும், அதன் வயது 2 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட பிராணிகளின் வயது மற்றும் இறக்குமதி அனுமதிப்பத்திரத்திற்குரிய தீக்கோழிகளின் வயதுகளில் வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

## 3.11 நட்டங்களும் சேதங்களும்

---

மீளாய்வாண்டிற்குரிய திணைக்களத்தின் கால்நடை மரணங்கள் மற்றும் அதற்குரிய கால்நடைகளின் பெறுமதி கணக்கிடப்பட்டு புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தில் இனங்காணப்பட்ட நாளாந்த தேவைப்பாட்டிற்கு மேலதிகமாக ரூபா 126,500 பெறுமதியான 02 கை விரலடையால இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன. கணக்காய்வு திகதியான 2016 யூலை 08 ஆந் திகதி வரை இவ்வியந்திரங்களில் ஒரு வகையினது உத்தரவாதக் காலமும் கடந்திருந்திருந்தது.

## 3.13 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 28 | 21 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 162 | 128 | 34 |
| (iv) | ஆரம்ப நிலை | 667 | 417 | 250 |
| | மொத்தம் | **859** | **567** | **292** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 292 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ்வெற்றிடங்களில் அதிகளவிலானவை கால்நடைகளை பாதுகாக்கும் செயற்பாடுகளுக்குரிய 61 வெற்றிடங்கள் கால்நடைகளின் சுகாதாரம், போசாக்கு மற்றும் கால்நடைக் கட்டுப்பாடு தொடர்பான பதவிகளுடன் நேரடியாக தொடர்புபடும் வெற்றிடங்களாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.